POST/HQ/OP/IPS/1163/2024

Transl Doc-133

கனடா நாட்டுக்கான விமான மூல அஞ்சல் பொருட்கள் ஏற்றுக்கொள்வதை மீண்டும் ஆரம்பித்தல்.

கனடா அஞ்சல் நிர்வாகத்தில் கடந்த சில நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாகக் கனடாவுக்கான விமான மூல அஞ்சல் ஏற்றுக் கொள்வதை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு அந்த நாட்டின் மூலம் சர்வதேச அஞ்சல் சேவைகள் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. தொழிற்சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் தற்போது முடிவடைந்துள்ளதால், அவர்களின் சர்வதேச அஞ்சல் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2024 டிசம்பர் 23 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என EMIS 219/2024 சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி

1. 2024 டிசம்பர் 23 ஆம் திகதி முதல் கனடா நாட்டுக்கான அஞ்சல் பொருட்கள் ஏற்றுக் கொள்வது மற்றும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.
2. அந்நாட்டு அஞ்சல் செயல்பாட்டு நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கும்போது சில தாமதங்கள் ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் கனடாவிற்கு வெளிநாட்டு அஞ்சல் பொருட்களை ஏற்றுக் கொள்ளும்போது அது தொடர்பாக எமது வாடிக்கையாளர்களை அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதி அஞ்சல் அதிபதி

(செயற்பாடுகள்)